**திருவாரூர் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**
**பிறப்பிப்பவர் : திரு. கு சண்முகநாதன், எம்.ஏ.,**

ந.க. 3864/2022/அ3 நாள்.22.07.2024.

| | |
|---|---|
| பொருள்: | பொதுப்பணி – கருணை அடிப்படையில் பணி நியமனம் – தமிழ்நாடு குடிமைப் பணிகள் (கருணை அடிப்படையில் பணிநியமனம்) விதிகள் 2023 வகுக்கப்பட்டு ஆணையிடப்பட்டது – மன்னார்குடி வட்டம் – பாலையூர் கிராம உதவியாளர் – மு.கணேசன் என்பவர் 02.02.2022 அன்று பணியிடைக்காலமானது – காலஞ்சென்ற அரசு ஊழியரின் மகன் திரு.க.ராஜ்குமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கியது – இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணியினை வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது. |
| படிக்கப்பட்டவை: | 1. அரசாணை (நிலை) எண். 18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(க்யூ 1) துறை, நாள். 23.01.2020.<br>2. அரசாணை (நிலை) எண். 48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள். 26.02.2021.<br>3. அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ–1) துறை, நாள்:08.03.2023.<br>4. அரசுக் கடித எண்.5532/G2/2023, மனிதவள மேலாண்மைத்(G) துறை, நாள்:20.09.2023<br>5. அரசுக் கடிதம் 1D எண்.850, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள்:08.12.2023<br>6. அரசுக் கடிதம் (1D) எண்.900, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள்:26.12.2023<br>7. அரசுக் கடிதம் (1D) எண்.13, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, பணி–9(2) பிரிவு, நாள்:18.01.2024<br>8. அரசுக் கடிதம் (1D) எண்.64, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள்:18.01.2024<br>9. கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர், வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம் கடித எண்.ஆ.கு.3/4600/2024. நாள்:20.02.2024.<br>10. மற்றும் தொடர்புடைய ஆவணங்கள். |

** ** **

**ஆணை–**

திருவாரூர் மாவட்ட வருவாய் அலகு, மன்னார்குடி வட்டம், பாலையூர் கிராம உதவியாளராக பணிபுரிந்து கடந்த 02.02.2022 அன்று பணியிடைக்காலமான

மு.கணேசன் என்பவரின் மகன் **திரு.க.ராஜ்குமார்** என்பவருக்கு உரிய கல்வி, வயது மற்றும் வறியநிலைத் தகுதிகளின் அடிப்படையிலேயே, கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளர் பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 1 முதல் 3–இல் காணும் அரசாணைகள், பார்வை 5 முதல் 8 வரை காணும் அரசு கடிதங்களில் பணியிடையே காலஞ்சென்ற அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன அலுவலரால் வழங்கப்பட்ட பணியினை ஏனைய விதிகளை பூர்த்தி செய்யும்பட்சத்தில் பார்வை 4–இல் காணும் அரசு, மனிதவள மேலாண்மைத்துறையின் கடிதத்தில் உள்ள வழிகாட்டுதல்களின்படி முடிவு செய்து உரிய செயல்முறை ஆணை பிறப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதன் அடிப்படையில், தனியரான **திரு.க.ராஜ்குமார் த/பெ.கணேசன் (லேட்) என்பவரின் பணியினை இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் 01.12.2022 முற்பகல் முதல்** பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

ஒம்/***
மாவட்ட வருவாய் அலுவலர்,
திருவாரூர்.

//ஆணைப்படி//

22.7.24

மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர்(பொது), 1/5
திருவாரூர்.

<u>பெறுநர்</u>

1. தொடர்புடைய நபர்.

22/7/24

2. தலைமை உதவியாளர் "ஐ" பிரிவு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருவாரூர். (பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொண்டு, பணிப்பதிவேட்டின் நகலினை அனுப்பிடும் பொருட்டு)

<u>நகல்</u>

1. கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர்,
   வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம், சேப்பாக்கம்,
   சென்னை – 600 005.
   (தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது)

2. அ3–இருக்கை பிரிவு.